**செய்தி வெளியீடு எண் : 492** **நாள்: 29.03.2022**

## செய்தி வெளியீடு

### மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் மகளிர் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் தீனதயாள் உபாத்யாய ஊரக திறன் பயிற்சித் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் அன்னை தெரசா மகளிர் வளாக கூட்ட அரங்கில் இன்று (29.03.2022) ஆய்வு மேற்கொண்டார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த ஆய்வின் போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் அனைத்தையும் ஒரே வணிக குறியீட்டின் கீழ் விற்பனை செய்திடும் பொருட்டு, 'மதி' என்ற பெயரிலான வணிகக் குறியீட்டினை புதுப்பித்து, புதுப்பொலிவுடன் தொடங்கி வைத்தார்.

மேலும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

- இந்த நிதியாண்டில் ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் 32,000 குழுக்கள் புதிதாக அமைத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை **36,000 குழுக்கள்** அமைக்கப்பட்டதின் வாயிலாக, **114 சதவீதம்** இலக்கு எய்தப்பட்டுள்ளது. இக்குழுக்களுக்குச் சுழல் நிதியாக 48 கோடி ரூபாயும், சமுதாய முதலீட்டு நிதியாக 255 கோடி ரூபாயும் என இதுவரை மொத்தம் ரூ. 303 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- அதிக எண்ணிக்கையிலான மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அரசின் திட்டங்கள் முழுவதும் சுய உதவிக் குழுக்களைச் சென்றடையும் வண்ணம், குழுக்களுக்கு ரூ.20,000 கோடி வங்கிக் கடனுதவி வழங்கி சாதனை புரிந்துள்ளோம்.
- மாவட்டங்களில் உள்ள **27 பூமாலை வணிக வளாகங்களைப்** புதுப்பித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர, ரூ. 66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ஊரகப் பகுதிகளில் **50 இயற்கை வேளாண்மை பண்ணைத் தொகுப்புகள்** பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இந்த நிதியாண்டில் **ஐந்து வாழ்வாதாரப் பூங்காக்கள்** அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது துவக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ஊரகப் பகுதியில் **2 லட்சம் ஊட்டச்சத்து வீட்டுத் தோட்டங்கள்** (முருங்கை, பப்பாளி, கீரை வகைகள் மற்றும் காய்கறித் தோட்டம்) உருவாக்கப்பட்டுள்ளன.

- ஊரகப் பகுதிகளில் நுண், குறு சிறு தொழில்கள் தொடங்க 36 **தொழில் தொகுப்புகள்** தேர்வு செய்யப்பட்டு, **சென்னை சமூகவியல் கல்லூரி** மற்றும் TANSITIA–FNF போன்ற பெரிய நிறுவனங்கள் மூலம் வாய்ப்பு கண்டறியும் ஆய்வு நடைபெற்று வருகிறது.

- மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருட்களை, மின்வணிக முறையில் விற்பனை செய்திட அமேசான் மற்றும் பிளிப்கார்ட் போன்ற நிறுவனங்களுடன் இணைப்பு ஏற்படுத்தி 300 **மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்த** நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- அனைத்து ஊராட்சிகளிலும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக இ–சேவை மையம் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளவும், பயணச்சீட்டு முன்பதிவு, மின் கட்டணங்கள் செலுத்துதல், கடவுச்சீட்டு, பான் கார்டு, ஆதார் கார்டு போன்றவற்றை பெறுதல் மற்றும் இணையவழி மூலமாக பல்வேறு கட்டணங்கள் செலுத்துதல் போன்ற சேவைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம், 2500 **குழுத் தொழில் நிறுவனங்களுக்கு** துவக்க நிதியாக 18.75 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலமாக மகளிர் தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தி, அவர்கள் உரிய முறையில் வணிகம் செய்திட ஒவ்வொரு மாவட்டத்திலும் **ஒரு மகளிர் வாழ்வாதார சேவை மையம், ரூ. 7 கோடி மதிப்பீட்டில்** அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- மேலும், 417 சமுதாயத் திறன் பள்ளிகள் அமைக்கப்பட்டு, அதில் **6000 படித்த கிராமப்புற இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி** வழங்க ஆவண செய்யப்பட்டுள்ளது.

- வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் இதுவரை 914 சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் துவங்கப்பட்டு, அதில் பங்கேற்கும் 9724 முன்னோடி விவசாயிகளுக்கு விவசாயப் பண்ணை மற்றும் கால்நடைப் பண்ணைப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இணைச் செயலாளர் திரு. சந்திரசேகர் சாகமூரி, இ.ஆ.ப., அவர்கள், மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் கூடுதல் இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in